**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C.** 356 /2022

**Prosecution Witness** : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. கண்மணி என்ற முனியம்மாள் | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 22.06.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused** **Present**.

பட்டியல் சாட்சி 1 திருமதி. கண்மணி என்ற முனியம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் சேத்தகவுண்டன் பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி நாகராஜனை தெரியும். கடந்த 11.11.2013 ம்தேதி 3.00 மணிக்கு நானும் எனது கணவரும் செம்பட்டியில் உள்ள வேலு நாயக்கர் கடைக்கு சாப்பிடுவதற்காக சென்றிருந்தோம். கடையில் வேலுநாயக்கருடன் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பால்பாண்டியும், நாகராஜ் என்பவரும்

சாப்பிடுவதற்காக கடைக்கு வந்தார்கள். நான் எனது கணவர் கடைக்காரர் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை பார்த்த நாகராஜ், பால்பாண்டியும் சக்கிலிய குதிமகனே எங்களை பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று கூறி நாகராஜ் எனது கணவர்முருகனை சட்டையினை பிடித்து கொள்ள பால்பாண்டி எனது கணவரை கட்டையால் இடுப்பு , கால், கை ஆகிய இடங்களில் அடித்தார். அருகில் இருந்தவர்கள் விலகிவிட்டார்கள். நான் எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துசெல்லாம் என்று கூட்டி வரும்போது எதிரிலிருந்து எனது கணவரின் தம்பி கொழுந்தனர் வந்தார். அவரையும் கூட்டிக்கொண்டு எனது கணவருடன் ஜெயபால் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர் இல்லததால் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றோம். புகார் கொடுத்துவிட்டு மீண்டும் எனது கணவரினை ஜெயபால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பின்பு சுமார் 2 மணி நேரம் கழித்து இரவு 7.30 மணியளவில் நான் எனது வீட்டிற்கு எனது கணவரினை அழைத்து வந்தேன். வீட்டில் அருகில் உள்ள மாட்டுகொட்டத்தில் நடந்த சம்பவத்தினை நான் , எனது கணவர் எனது மகன் வெங்கடேஷ்குமார் பேசிக்கொண்டிருந்தோம். பின்னர் நான் வீட்டிற்குள் சென்றுவிட்டேன். . இரண்டு ஆட்டோ நிறைய ஆட்கள் மற்றும் இரண்டு இரு சக்கர வாகனத்தில் ஆட்கள் வந்தார்கள். கடப்பாறை மற்றும் கம்பியுடன் வந்த நபர்கள் எனது கணவர் மற்றும் எனது மகனையும் அடித்தார்கள். கல்லே துாக்கி எறிந்தார்கள். நான் சத்தம் கேட்டு வீட்டில் இருந்து வெளியே வந்த நான் அவர்களிடம் சாமி அடிக்காதீர்கள் என்று சொன்னேன். அப்போது அவர்கள் என்னை சக்கிலிச்சிக்கு உனக்கு இவ்வளவு திமிறா நீ இன்ஜினியர்க்கு படிக்க வைக்குற என்று சொல்லி என்னை இழுத்து தள்ளி விட்டு நீயொல்லம் இன்ஜினியர்க்கு படிக்கனுமடா என்று சொல்லி பால்பாண்டி அடித்தார். எனது கணவரினை

பால்பாண்டி இரும்பு கம்பியைக் கொண்டு அழுத்தினார். நாகராஜ் கடப்பாறை கம்பினால் எனது கணவரினை அடித்தார். ஜெயசந்திரன், விஷ்ணு, **Sriram**, ஆகியோர்கள் கற்களை கொண்டு எறிந்தார்கள். சத்தம் கேட்டு அருகில் இருந்த எனது அக்கா மகன் வந்து எனது மகனுக்கு ரத்தம் வழிவதே பார்த்து இவர்களிடம் ஆட்கள் அதிகமாக இருக்கிறார்கள் . இவர்களிடம் சண்டை போட முடியாது என்று சொல்லி காட்டு வழியாக சென்று மதுரை ரோட்டில் ஆம்புலன்ஸ் மூலம் ஏறி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் சேர்ந்தோம்.. அதன்பின்னர் மறுநாள் காலை செம்பட்டி காவலநிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். அவர்கள் புகாரினை வாங்க மறுத்துவிட்டார்கள். அதன்பின்னர் போலீசார் மருத்துவமனைக்கு வந்து வெள்ளை தாளில் எனது கணவரிடம் கையொப்பம் கேட்டார்கள். எனது கணவர் கையொப்பம் போட மறுத்தார். நான் **SP** அலுவலகத்திற்கு சென்று **Sp** யிடம் புகார் கொடுத்து கொள்கிறேன் என்று சொல்லி **SP** அலுவலகம் சென்ற என்னை **SP** அலுவலகம் முன்பு வைத்து புகாரினை வாங்கி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அந்த புகார் மனு அதசாஆ. 1 ஆகும்.

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை

J MOHANA
Digitally signed by J MOHANA
Date: 2023.06.23 10:31:17 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**,

**DINDIGUL**.

**C.C**. 356 /2022

**Prosecution Witness** : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. முருகன் | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 22.06.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present**.

பட்டியல் சாட்சி 2 திரு. முருகன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் கேத்தயகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.. அசா1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி நாகராஜினை தெரியும். கடந்த 11.11.2013 ம்தேதி சுமார் 3.00 மணியளவில் செம்பட்டி பேருந்து நிலையத்திற்கு அருகில் வேலுநாயக்கரின் முனியாண்டி விலாஸ் ஓட்டலுக்கு நானும் எனது மனைவியும் சாப்பிடுவதற்காக சென்று வேலுநாயக்கருடன் பேசிக்கொண்டிருந்த போது பால்பாண்டியும், நாகராஜ்மும் வந்து ஏன்டா

சக்கிலிய குதிமகனே என்று சொல்லி பால்பாண்டி பிடித்துக்கொள்ள நாகராஜ் என்னை கட்டையால் இடுப்பு , நெஞ்சு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார். அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். மருத்தவமனைக்கு செல்லாம் என்று வந்த போது எனதுதம்பி பழனிவேல் வந்தார். அவர் என்னை ஜெயபால் மருத்துவமனைக்கு அழைத்துவந்தார். அங்கு மருத்துவர் இல்லை. பிறகு புகார் கொடுப்பதற்காக செம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்ற போது அங்குஆள் இல்லை. வலி அதிகமாக இருந்ததால் மீண்டும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு , மூன்று மணி நேரம் கழித்து சுமார் 8 மணியளவில் வீட்டிற்கு சென்றேன். அங்கு எனது மகன் வெங்கடேஷ்குமார் சண்டை சம்மந்தமாக கேட்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது பால்பாண்டி, நாகராஜ், **Sriram**, விஷ்ணு, ஜெயசந்திரன் , செல்வராஜ் மற்றும் அடையளாம் தெரியாத 17 பேர்கள் இரண்டு ஆட்டோ மற்றும் இரண்டு இருசக்கர வாகனத்தில் வந்து என்னையும் எனது மகன் இருவரையும் இழுத்து அடித்து சக்கிலிய குதிமகனே நீ இன்ஜினியர்க்கு , ஆசிரியர்க்கு படிக்க வைக்கலாம என்று கூறி அடித்தார்கள். நான் சத்தம் போடவே எனது உறவினர் பெருமாள் என்னையும் எனது மகனையும் மதுரை ரோட்டிற்கு ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை

J MOHANA Digitally signed by J MOHANA Date: 2023.06.23 10:31:24 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**,

**DINDIGUL**.

**C**.**C**. 356/2022

**Prosecution Witness** : 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. வெங்கடேஷ்குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 22.06.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present**.

பட்டியல் சாட்சி 3 திரு. வெங்கடேஷ்குமார் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் கேத்தயகவுண்டன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 மற்றும் அசா2 ஆயோர்கள் எனதுஅப்பா அம்மா ஆவார். ஆஜர் எதிரி நாகராஜ்னை தெரியும் ,. கடந்த 11.11.2013 ம்தேதி இரவு 8.00 மணியளவில் மதியம் வேலுநாயக்கர் ஓட்டலில் பால்பாண்டியும், நாகராஜ்மும் எனது அப்பாவையும் அம்மாவையும் அடித்தது தொடர்பாக நான் அப்பாவுடன் கேட்டுக்கொண்டிருந்த போது சக்கிலிய குதிமகளே நீ உன் மகனை

இன்ஜினியரிங் படிக்க வைப்பாயா என்று சொல்லி பால்பாண்டி எனது அப்பாவை கழுத்தை பிடித்து அடித்ததாகவும் நாகராஜ் கட்டையை எடுத்து எனது அப்பாவின் முதுகில் அடித்தாகவும் எனது அம்மா என்னிடம் சொன்னார். சண்டை முடிந்தவுடன் அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டு சண்டை முடிந்த உடன் அ்ங்கு வந்த எனது சித்தப்பா என்ன சண்டை என்று விசாரித்து ஜெயபால் மருத்துவமனைக்கு சென்றததாகவும் அங்கு மருத்துவர் இல்லததால் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்து விட்டு மீண்டும் மருத்துவமனைக்கு சென்றதாகவும் அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டு 3 மணி நேரம் ஓய்வு எடுத்துவிட்டு கூறியதாகவும் அதன்பின்னர் 8 மணிக்கு நாங்கள் வீட்டிற்கு வந்ததாகவும் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது வீட்டிற்குள் சென்றிருந்தார். சுமார் 9 மணியளவில் 2 ஆட்டோ மற்றும் 2 இருசக்கர வாகனத்தில் பால்பாண்டி, நாகராஜ், ஜெயசந்திரன் , பால்பாண்டியின் அக்கா மகன் விஷ்ணு, **Sriram**, உள்ளட்ட பெயர் தெரியாத அடையாளம் தெரியாத சுமார் 17 நபர்கள் வந்து பால்பாண்டி எனது அப்பாவின் கழுத்தில் கடப்பாறை வைத்து அழுத்தி கொள்ளவே நாகராஜ் கட்டையால் எனது அப்பாவை அடித்தார். விஷ்ணு , **Sriram** ஆகியோர்கள் என்னை அடித்து ஆடைகளை கிழித்து ஜட்டியுடன் ரோட்டில் இழுத்துபோட்டுவிட்டார்கள். செல்ராஜ் மற்றும் ஜெயசந்திரனும் கல்லைக் கொண்டு எங்கள் மீது எறிந்தார்கள். எனது அம்மாவை தலையை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள். பால்பாண்டி எனது அம்மாவை மார்பிள் உதைத்து சக்கிலிய குதிமகனே உனது மகனை இன்ஜினியரிங் படிக்க வைக்கிறாயா எப்படி படிக்க வைக்கிறாய் என்று பார்ப்போம் என்றும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். அடி தாங்கமல் எனதுஅம்மா சத்தம் போடவே 4 வீடு தள்ளி, குடியிருக்கும் எனது பெரியம்மா மகன் பெருமாள்

மற்றும்ஊரிலிருந்து ஆட்கள் வரவே எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின் நாங்கள் காட்டுவழியாக மேட்டுபட்டி வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் சேர்ந்தோம்.. அங்கு சிகிச்சையில் இருந்த போது போலீசார் அங்கு வந்திருந்தார்கள்.. அவர்கள் நாங்கள் சொன்ன எதையும் எழுத மாட்டோம் என்று சொல்லி வெறும் கையொப்பம் மட்டும் போடுமாறு எனது அப்பாவினை மிரட்டினார்கள். நீயாவது கையெழுத்து போடு என்று என்னையும் மிரட்டினார்கள். அதன்பின் நாங்கள் **SP** யிடம் புகார் கொடுத்து கொள்கிறேன் என்று போலீஸ்சாரிடம் சொல்லிவிட்டு அடுத்த நாள் புகார் கொடுக்க செல்லும் போது இடையில் எனது அம்மாவை மறித்து செம்பட்டி போலீசார் புகாரினை எனது அம்மாவிம் பெற்று கொண்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை

J MOHANA

Digitally signed by J MOHANA
Date: 2023.06.23 10:31:30 +0530